## போரா? சமாதானமா? மக்கள் தீர்மானிக்கட்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 20 இதழ் 275
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6-11-1994

## பிரதமர் சந்திரிகா

[கொழும்பு[

வடக்கு-கிழககு யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதா? அல்லது சமாதானப்பச்சை நடாத்துவதா? இதை மக்களிடையே விடுகிறேம், இவ்வாறு சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க நேற்று ரூபவாஹினி மூலம் நிகழ்த்திய தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்தார்.

அதில் அவர்மேலும் கூறியதாவது: இந்த நாட்டில் கொலைக் கலாசாரத்தைக் கொண்டுவந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே. அவர்களது ஆட்சிக் காலத்தில் வட

(6ம் பக்கம் பார்க்க)

ஜனுதிபதி தேர்தல்:

## சந்திரிகாவுக்கே வெற்றி வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 9ம் திகதி நடைபெறவுள்ள ஜனுதிபதி தேர்தலில் பொ. ஐ. முன்னணி வேட்பாளர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா வெற்றிபெற்று ஜனுதிபதியாக நியமனம் பெறுவார் என்று அரசியல் அவதானிகள் ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியை விட திருமதி சந்திரிகா ஜனுதிபதி தேர்தலில் அதிகப்படியான

(6-ம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் வைத்து

# பிரதி அமைச்சர் மைத்திரியை படுகொலை செய்ய முயற்சி!

## வாகனம் மீது குண்டுவீச்சு; சுடவு முயற்சி

[கொழும்பு]

நீர்ப்பாசன பிரதி அமைச்சர் திரு. மைத்திரிபால சிறிசேனவை பொலநறுவையில் வைத்து படுகொலை செய்ய முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அவர்மீது துப்பாக்கிச்சூடு நடாத்த முயன்றதாகவும் அதுமுடியாமல் போகவே அவரது வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்ட போதும் அவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளாராம்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: பொலநறுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்கு பிரதி அமைச்சர் நேற்று தனது வாகனத்தில் சென்றுகொண்டிருக்கையில் அம்மாவட்டத்தின் கிராமபுற பகுதியொன்றில்வைத்து திடீரென அவர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்த சிலர் முயன்றனர்.

இதனைக் கண்ட அவரது மெய்பாதுகாப்பாளர்கள் அவரை வாகனத்தினுள் மறை

(6-ம் பக்கம் பார்க்க)

ஜனுதிபதி தேர்தலின் பின்

## முப்படைகளிலும் பாரிய மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்காவின் முப்படைகளிலும் எதிர்வரும் ஜனுதிபதி தேர்தலின் பினனர் பாரிய மாற்றங்கள் இடம்பெறலாம் என ராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை வடபகுதி இராணுவ முகாம்களிலிருந்த இளவணி பட்டாலியன்கள் மாற்றப்பட்டு பதிலாக சிங்க றெஜிமன்ட் பட்டாலியன்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டன.

கடந்த குறுகிய காலப்பகுதி

(2-ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்விற்கு ரூ. 225 கோடியே ஒதுக்கு

(கொழும்பு)

1994ம் ஆண்டில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென 538 கோடி ரூபா பணம் ஒதுக்கப்படவுள்ள வேளையில் புனர்வாழ்வுக்கென 225 கோடி ரூபாவே ஒதுக்கப்படவுள்ளது.

நாட்டின் சாதாரண பாதுகாப்பு செலவீனம் தவிர்ந்த பாதுகாப்பு நடவடிக்கை

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழர், முஸ்லிம்களுக்கு எதிராக ஐ. தே. க. இனவாத பிரசாரம்

(கொழும்பு)

தமிழர்களுக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் இனவாதம் பேசிவருவதை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது என்று 'ராவய'ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜனுதிபதிதேர்தலின் மற்றெரு அபேட்சகரான ஹட்சன் சமரசிங்க, பொதுசன ஐக்கிய முன்னணிக்கு போடும் வாக்குகள் புலிகளுக்குபோடும் வாக்குகளாகும் என்றும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எதிராகப் போடும் வாக்

(2ம் பக்கம் பார்க்க)

## சிதைக்கப்பட்ட இலங்கையை மீண்டும் ஐக்கியப்படுத்துவேன்

பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எதிராக மாறுபட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டுள்ள எதிர்க்கட்சி அரசியல் குழுக்களின் நம்பிக்கையை அரசாங்கம் தற்போது பெற்றுக்கொண்டிருப்பதாக பிரதம மந்திரி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்: திரு. எஸ். தொண்ட

(6-ம் பக்கம் பார்க்க)

ஜனுதிபதி தேர்தலின் பின்

## ஐ. தே. கவில் ரணிலின் கை ஓங்கலாம்

(கொழும்பு)

ஜனுதிபதி தேர்தலின் பின்னர் ஐ. தே. க. வில் திரு. ரணில் விக்கிரமசிங்காவின் கை ஓங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. தே. க.வைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர உறுதியான

(2-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரம் இன்று நள்ளிரவுடன் முடிவு

(கொழும்பு)

ஜனுதிபதித் தேர்தல் பிரச்சாரங்கள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவடைந்து விடுமென்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அறிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:வானெலி, தொலைகாட்சி மூல தேர்தல் பிரசாரம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது. தற்போது ஜனுதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி அடைந்துவிட்டன.

தேர்தலின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு 60 ஆயிரம் பொலிசாரும், அவர்களுக்கு உதவியாக இராணுவத்தினரும் உஷார்

[2ம் பக்கம் பார்க்க]

★ தறகொலைப் பெண்ணுடன் தொடர்பு

## கொழும்பு ஆஸ்பத்திரியில் தமிழ் டாக்டர் கைதானர்!

(கொழும்பு)

திரு. காமினி திசாநாயக்கா உட்பட பலரை படுகொலை செய்த குண்டுவெடிப்புக்கு காரணமாக இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பெண்ணுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த தமிழ்வைத்தியர் ஒருவரை இரகசியப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரதான வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் இவ்வைத்தியர் நேற்று முன்தினம் கைதுசெய்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வியாழ மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. ரூபா 10/- (எல்லா ராசிகளின் பலன்கள்) பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (நூலாசிரியர்-சத்யா) கட்டுடை.
(சி-1298)

### ஜோஸ்யர் மலர்

இல்லம்தோறும் அப்பா, அம்மா, தம்பி, தங்கை அனைவரும் குதூகலத்துடன் வியாழ மாறுதல்பற்றி அலசல் அலச ஜோஸ்யரின் வியாழ மாறுதல் மலர் புதனன்று எல்லோருக்கும் கிடைக்கும். ஆறு ரூபாயில் விடயதானம் பெருமை சேர்த்திருப்பின் எமக்கும் ஒரு வரி எழுதுங்கள். வேறுமலர்களை வெளிக்கொணரும். (சி-1299)


# 156 கோடி ரூபா பெறுமதியுள்ள
# நைலோன் தொழிற்சாலை 23 கோடி ரூபாவுக்கு விற்பனை

[கொழும்பு]

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நைலோன் தொழிற்சாலை முன்னைய அரசாங்கத்தினுல் கொரிய கம்பனி ஒன்றுக்கு மிகக்குறைந்த விலையில் விற்கப்பட்ட சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டு 60 கோடி 30 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட இத்தொழிற்சாலை முன்னைய எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கே. டி. எம். சந்திரா பண்டாரவின் சிபார்சுக்கமைய 23 கோடி ரூபாவிற்கு வழங்கப்பட்டது. விற்கப்பட்ட வேளையில் இந்தத்தொழிற்சாலையின் பெறுமதி 156 கோடி 30 லட்சம் ரூபா என்று அரசாங்கத்தின் பிரதம பெறுமதி மதிப்பீட்டாளர் தெரிவித்திருந்தார்.

தொழிற்சாலையின் வர்த்தக செயற்பாட்டு நிலைமை ரூபா நாணயத்தின் மதிப்பிறக்கம் ஆகியவற்றினை கருத்திற்கொண்டு இந்த தொழிற்சாலை குறைந்த பட்சம் 120 கோடி ரூபாவிற்காவது விற்கப்படவேண்டும் என்று அவர் கூறியிருந்தார். இருந்தபோதிலும் திரு. சந்திர பண்டார தென்கொரிய கொம்பனி ஒன்றிற்கு 23 கோடி ரூபாவிற்கு விற்பதாகமுடிவுசெய்து 1991 ஆகஸ்ட் மாதம் 31ம் திகதி அதற்கான அமைச்சரவை அனுமதியையும் பெற்றுக்கொண்டார்.

அரசாங்க நிறுவனங்கள் 90 சதவீத பங்குகளை விற்பனை செய்ய மக்கள் மயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொழிற்சாலையை விற்பது தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டபோது பல நிறுவனங்கள் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்தன. இவற்றில் 3 நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தபோதும் தென் கொரிய நிறுவனத்துடன் மாத்திரமே பேச்சுக்கள் நடத்தி அதற்கு விற்கப்பட்டுள்ளது. ; கே

## ஸ்கந்த ஷஷ்டி

(கொழும்புத்துறை)

மட்டுவில் தெற்கு வேரக்கேணி ஸ்ரீகந்தசுவாமிகோயில் கந்தசஷ்டி மகோற்சவ விழா கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'சூரன் போரும்' 9ஆம் திகதி புதன் கிழமை திருவிளக்குப் பூசையும், 10ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாணம் திருவிழாவும் நடைபெறும்.
(154)

0 0

(பண்டத்தரிப்பு)

பண்ணகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் ஸ்கந்தஷஷ்டி உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 8ம் திகதி சூரசங்காரம் நடைபெறவுள்ளது.
(72)

0 0

0 0

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஸ்கந்தசஷ்டி உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது, எதிர்வரும் 8ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பிற்பகல் சூரசங்காரம் உற்சவம் நடைபெறவுள்ளது,
(72)

0 0 0

[கொழும்புத்துறை]

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் கோவில் ஸ்கந்தசஷ்டி திருவிழா கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.
(154)

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீசந்திரசேகர விநாயகர் கோவில் ஸ்கந்தசஷ்டித் திருவிழா, கடந்த 4ம் திகதி ஆரம்பமாகியது. 8ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகளுடன் நடைபெறுகின்றது.

சூரன் போர் 8ம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 5-00 மணிக்கு நடைபெறும். (154)

0 0

(கொழும்புத்துறை)

அளவெட்டி ஸ்ரீகும்பிளாவளைப்பிள்ளையார் கோயிலில் ஸ்கந்தசஷ்டி திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

### இன்று

(யாழ்ப்பாணம்)

வல்வை கவிக்குயில்கள் கலாமன்றத்தின் 'அழகிய கண்ணே' கையெழுத்துச் சஞ்சிகையின் ஆண்டு மலர் வெளியீட்டு வைபவம் இன்று ஞாயிறு வல்வை சிவகுரு வித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

ஒப்பந்த அடிப்படையில் முழு நேர உப விடுதித் தலைவர் பதவிக்கான (ஆணும், பெண்ணும்), விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 - 11 - 30 வரை என்னல் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்

ரூபா 5400/- (நிலையானது) மாமொன்றுக்கு)

தகைமைகள்:

அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.

விடுதிகளை நிருவகிப்பதிலும், முகாமை செய்வதிலும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு:-

தெரிவு தேர்வு மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும் நடைபெறும். வெற்றி பெறும் விண்ணப்பதாரி நியமனம் பெறும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாலசிங்கம் விடுதி/ ஆனந்தகுமாரசாமி விடுதி/ பெரிய கடை விடுதி/ மலாயச் சங்க விடுதி/ இராமநாதன் நுன்கலைத் கல்விக் கழக விடுதி அல்லது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாய பீட விடுதி ஆகியவற்றிலொன்றில் வசித்தல் வேண்டும். ஆனல், வதிவு மண்டபத்தில் குடும்பத்துடன் வசிக்க முடியாது.

வெற்றி பெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணைவைப்பாக, 5000/. ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்து பத்து மாதாந்தத் தவணைப் பணங்களில் அறவிடப்படும்.

சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றுப் படியாக 1994 திசெம்பர் 31 ஆம் தேதி வரை செலுத்தப்படும்.

1993 மே 12 ஆம் தேதிய 9/93 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப 600/- ரூபா மாதாந்தப்படி செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியின் நவீன சந்தை கிளையிலோ சிறுப்பரின் முகப்பு மேசையிலோ 20/- ரூபாவைச் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலககத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/ ரூபா பெறுமதியுடைய காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 X 10 ச, மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ளோர் தமதுவிண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாதவாறு விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்,

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-10-27.

(எ- 4483)


## மனிதப் புதைகுழிகளுக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை
### — நீதியமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

மனிதப்புதைகுழிகள்தோண்டப்படுவதற்கும் அரசியலுக்கும் எதுவித தொடர்பும் இல்லையெனவும் அவ்வாறு வெளியாகும செய்திகள் பொய்யானவை எனவும் நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மனிதப்புதைகுழிகள்தோண்டப்படுவது குறித்து பத்திரிகையாளர்கள் அமைச்சரிடம் வினு எழுப்பியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மனித புதைகுழிகள் தொடர்பாக மக்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கும் புகார்களின் அடிப்படையிலேயே அவை தோண்டப்படுகின்றன என்றும் இதில் அரசியலிற்கு இடம் இல்லையெனவும் தெரிவித்தார். க.இ

### ஜனுதிபதி தேர்தலில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமைத்துவம் இல்லாதநிலை ஏற்பட்டுள்ளது.

காமினி திஸாநாயக்காவின் கொலையை அடுத்து கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகளைத் தவிர்க்கும் பொருட்டு திரு. ரணில் விக்கிரமசிங்க ஜனுதிபதி வேட்பாளராக போட்டியிடுவதிலிருந்து வாபஸ் பெற்றுர்.

தற்பொழுது அனுதாப வாசகுகளைபபெறும்பொருட்டு காமினி திஸாநாயக்காவின் மனைவியை ஜனுதிபதி வேட்பாளராக ஐ. தே. க. நியமித்துள்ளது. இத்தெரிவு தொடர்பாக கடும் போட்டி நிலவிய பேதிலும் இறுதியில் திருமதி திஸாநாயக்காவே தெரிவானுர்.

இத்தேர்தலில் திருமதி சிறிமா திஸாநாயக்கா தோல்வியடைந்தால் ஐ. தே. கவின் முழுப்பொறுப்பும் திரு. ரணில் விக்கிரமசிங்கவிடமே ஒப்படைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ரி சி)

### தேர்தல் பிரசாரம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நிலையில் உள்ளார்கள்.

நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமைவரை மூடப்பட்டிருக்கும் பாடசாலைகள்யாவும் 8ம் திகதி முதல் 10ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்தார் வீ-சி


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

1995ம் ஆண்டில் யாழ். பொரும்பாகத்தில் (கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த) உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு சலவைச்சேவையை வழங்குவதற்கான கேள்விகள் 1994ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்படிவம் வழங்குவதற்கான கடைசி நாள் 22-11-1994 மதியம் 12 மணியாகும். முழுவிபரங்களையும் எனது பணிமனையில் பார்வையிடலாம்.

பி. கு. ஆதார, மாவட்ட, சுற்றியல்கூறு கிராமிய வைத்தியசாலைகள் ஆகியவற்றினது படிவங்கள் எனது பணிமனையிலேயே விநியோகிக்கப்படும்'

ஒப்பம்

நா. விவேகானந்தன்
தாய், சேய் நல வைத்திய அதிகாரி,
மாகாண பிரதிப் பணிப்பாளருக்காக

மாகாண பிரதி பணிப்பாளர் பணிமனை/
சுகாதார சேவைகள்
33, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்
04-11-1994.

(ஏ-4484)


### முப்படைகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### தமிழர்

(1-ம் பககத்தொடர்ச்சி)

குகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போடப்பட்டதாக இருக்கும் என்றும் பிரசாரம் செய்கின்றுர். பூமி புத்திர கட்சியும் தேர்தலில் இனவாதத்தைப் பேசிவருகின்றது.

ஐ. தே. கவைச் சேர்ந்த ஹட்சன் சமரசிங்க அக்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தேடும் நோக்கிலேயே சுயேட்சையாக போட்டியிடுகிறுர்.

சிங்கள மக்களில் அநேகர் இனவாதத்தை எதிர்த்து வருகின்றுர்கள், இந்த இனவாதத்தை முன்பு கிளப்பியவர்கள் பௌத்த பிக்குகள். ஆனுல் அவர்களோ இன்று இனவாதத்துடன் எந்தவித தொடர்பும் இல்லாது இருக்கிறுர்கள். தற்போது ஐ.தே.கவினர் இனவாதம் பேசிவருகிறுர்கள் என்றுர். ம-சி

# பத்துக் கோடி ரூபா செலவில் தஞ்சாவூரில் 8-வது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு

1995 ஜனவரியில் தஞ்சாவூரில் நடைபெறும் எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு முழுக்க முழுக்கத் தமிழக அரசின் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலிலும் நடைபெறுகின்றது. யப்பானிய அறிஞர் கரோஷிமா தலைமையிலான அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் இதற்கான முழு ஆதரவையும் தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. கரோஷிமா அடிக்கடி தமிழகம் வந்து போகிறார். மாநாட்டு அமைப்பில் ஆர்வம் காட்டுகிறார். ஆராய்ச்சிஅரங்கு பற்றிக் கவனம் செலுத்தி வருகிறார்.

ஆராய்ச்சி அரங்குகள் நடைபெறவுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூரில் இருந்து திருச்சி செல்லும் சாலையில் 10 மைல் தொலைவில்உள்ளது.

ஏறத்தாழ 1000 அறிஞர்கள் மாநாட்டில் கலந்துகொள்வர் இவர்களுள் 40% தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். 20வீதம் ஈழத்தவர்கள், எஞ்சியவர்கள் 40 நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், மூன்றாவது பெரிய குழு இம்முறை தென்ஆபிரிக்காவில் இருந்து வருகிறது, பிஜியில் இருந்து எவரும் வரவில்லை என்பதில் பலருக்கு வருத்தம்.

ஜனவரி 1—5நாட்கள் நடைபெறும் மாநாட்டில் சிற்றரங்குகளும், பேரரங்குகளும் நடைபெறும். 600க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அரங்கேற்றப்பட்டு விவாதிக்கப்படும். இவற்றுள் பத்தில் ஒரு பங்கு கட்டுரைகளை ஈழத்து அறிஞர்கள் வழங்குவர்.

1000க்கு மேற்பட்ட அறிஞர்கட்கு உறைவிடம், அரங்குகட்குப் போக்கு வரத்து வசதி, உணவு, பரிசுப்பொருள்கள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்காகத் தமிழக அரசு 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. மாநாடுமுடிந்தவுடன் தை 7—15 நாள்களில் 150 பேராளர்கள் மட்டும் தமிழகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர். அதற்காகச் சொகுசுப் பேருந்துகள் தயாராகி வருகின்றன. தமிழகமெங்கும் விடுதிகள், கலைநிகழ்ச்சிகள், வரவேற்புகள் ஏற்பாடாகின்றன.

ஆராய்ச்சி அரங்குக்கு வருபவர்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் குழுவும், கரோஷிமா தலைமையில் உள்ள அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றமும் தெரிந்தெடுத்து வருகின்றன, பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவர்கள், ஆராய்ச்சிநிறுவனஅறிஞர்கள், தனிப்பட்ட ஆராய்ச்சியாளர் என அறிஞர்கள் மட்டுமே அரங்குகட்குள் வரவும் பங்குகொள்ளவும் ஏற்பாடாகி வருகிறது.

மாநாட்டுக்கு விண்ணப்பித்த அறிஞர்கள் அனைவருக்கும் முதற்கடிதப் பதில் அனுப்பப்பட்டுள்ளது. இரண்டாவது சுற்றறிக்கையும் கட்டுரை தெரிவானதா என்ற விபரமும் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமே தெரிவாகின்றன. பொதுக்கட்டுரைகள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆராய்ச்சிப் பின்புலம்இல்லாதவர்கள் கட்டுரை அனுப்பி இருப்பின் அது தெரிவாகாவிடின் வருத்தப்படவேண்டாம்,

ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதும் நெறிமுறைகள் பற்றிப் பலமுறை பல்வேறு விதங்களில் அறிவிக்கப்பட்டும் பொதுக்கட்டுரைகளை அனுப்பி வருபவர்கள் பற்றித் தெரிவுக் குழுவினர் வேதனை அடைந்துள்ளனர்.

இதுபோலவே ஆராய்ச்சி அறிஞர்கள் அல்லாதவர்களின் விண்ணப்பங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, மூன்று அல்லது நான்கு அறிஞர்களே விண்ணப்பித்த ஒருநாட்டில் இருந்து அறிஞரல்லாதவர் 700 பேர்வரை விண்ணப்பித்துள்ளனர், இத்தகையோர் மாநாட்டு ஆராய்ச்சி அரங்கில் பங்கு பெறுவது எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தெரிவுக்குழுவினர் கருதுவதில் வியப்பில்லை.

25 அறிஞர்கட்குத் தமிழக அரசு அழைப்பு அனுப்பியுள்ளதுடன் இவர்களின் விமானப் பயணச்சீட்டு மற்றும் செலவுகளையும் ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம் புதுப்பொலிவு பெற்று வருகின்றது. சுற்றிப் பல புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

மறவன்புலவு
க. சச்சிதானந்தன்

மாநாட்டையொட்டித் தஞ்சாவூர் நகரில் பொதுமக்களுக்காக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நகருக்கு வரும் நெடுஞ்சாலைகளில் தோரணவாயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலை, சாக்கடை, குடிநீர், தொலைத்தொடர்பு, மின்சார வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் யாவும் புதுப்பிக்கப்பட்டும் அமைக்கப்பட்டும் வருகின்றன.

கலைநிகழ்ச்சிகள், கண்காட்சிகள், சிலை திறப்புகள், பாட்டரங்குகள், பேச்சரங்குகள் என நகரம் முழுவதும் நிகழ்ச்சிகள் ஏற்பாடாகின்றன. அலங்கார ஊர்திகளும் தயாராகி வருகின்றன. குரும்பசிட்டி கனகரத்தினத்தாரின் அரிய சேகரிப்புகள் கொண்டுவரப்பட்டுக் காட்சியில் வைக்கப்படுவதில் அறிஞர்கட்கு ஆர்வம் உண்டு. ஈழத்து நூற்கண்காட்சி காந்தளகம் சென்னையில் ஏற்பாடாகும்,

ஆராய்ச்சி மாநாட்டுக்குப் புறம்பாக பொதுமக்கள் நிகழ்வுகளைப் பார்க்க தமிழகம், பாண்டிச்சேரி, பிற இந்திய மாநிலங்கள், உலக நாடுகள் எங்கனுமிருந்தும் தமிழர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வல்லத்துக்கும் தஞ்சாவூருக்கும் உள்ள 10 ஆராய்ச்சி அரங்கையும் பொது மக்கள் நிகழ்ச்சிகளையும் கலக்கவிடாமலும் ஒன்றுக்கொன்று இடையூறின்றி நடக்கவும் வழிவகுக்கும்.

அறிஞர்கள் அல்லாதவர்களும் மாநாட்டுக்கு வருவதில் தமிழக அரசு ஆர்வம் காட்டி, தமிழர்வாழும் நாடுகளான இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், மொரிசியசு, தென்ஆபிரிக்கா ஆசிய நாடுகளில் செய்தி இதழ்களில் விளம்பரங்கள் வெளியிட்டுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவரும் பிரதமரும் மாநாட்டுத் தொடக்க விழாவில கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தஞ்சாவூர் நகருக்கு வருவார்கள். வல்லத்துக்கு வருவது உறுதியாக வில்லை. எனினும் உலகத் தமிழ் அறிஞர்களை இவர்கள் சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

மாநாட்டுப் பொறுப்பு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனிடம் உள்ளது. மாநாடு தொடர்பான குழுக்கள் அனைத்துக்கும் அமைச்சர்களே தலைமை தாங்குகின்றார்கள்தஞ்சாவூர்க்காரரான அமைச்சர் திரு. எஸ். மோமசுந்தரம் முக்கிய பணிகளைக் கவனித்து வருகிறார்.

பொதுமக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க வரும் உலகத் தமிழர்கட்கு விசா வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மலேஷியா, சிங்கப்பூர், மொரிசியசு, தென் ஆபிரிக்கா, இலங்கை ஆகிய நாடுகளின் அமைச்சர்களும் அழைக்கப்படுவர். இன்னமும் எவருக்கும் அழைப்புப்போய்ச் சேரவில்லை.

தஞ்சாவூர் இப்பொழுதிலிருந்தே விழாக்கோலம் பூண்டுள்ளது. அதிமுக மாநாடாகத்தான் இவ்விழா நடைபெறும் என்ற ஊகம் உள்ளது. பல கட்சிகள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என அறிவித்து உள்ளன.

தமிழ் மொழியை ஆட்சி மொழியாக நடைமுறைப் படுத்தாமல் மாநாட்டை நடத்தினால் அங்கு பல முனைப் போராட்டம் நடைபெறும் எனத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது. அ. தி. மு. க. மாநாடாக நடைபெறுவதால், குடியரசுத் தலைவரும், பிரதமரும் கலந்து கொள்ளக் கூடாது என தமிழகக்காங்கிரஸ், தி.மு.க. உட்படப் 14 கட்சிகள் கூடித் தீர்மானமும் இயற்றியுள்ளன.

இவற்றையெல்லாம் மீறி, அரச எந்திரமும் அ.தி.மு.க தொண்டர்களும், தமிழகப் பல்கலைக் கழகப் பேராசிரியர் குழுவினரும் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிக்கக் கங்கணம் கட்டியுள்ளனர்.

சி

# பொதுசன அமைப்புக்களின் நோக்கங்கள்

[தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு தமிழீழ மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் / சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களினதும் ஏனைய பொது அமைப்புக்களினதும் தமிழீழ நிர்வாக சேவையுடனானநிர்வாகத் தொடர்பு முறைகளும் பதிவு செய்தல், செயற்படுத்தல் தொடர்பான வழிகாட்டலும்].

## நோக்கம், குறிக்கோள், இலக்கு

கடந்த 53 ஆண்டு காலத்தில் அபிவிருத்திச் சிந்தனையிலும், செயலிலும் செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கும் மரபு வழிவந்த முதன்மைக் கோட்பாட்டிற்கும், மாற்றுக் கோட்பாடு ஒன்றின் மூலம் பதிலீடு செய்வதற்கு இம்மக்கள் அமைப்புக்களை எமது கட்டமைப்பிற்குள் உள்வாங்குவதால் பங்கு கொள் கிராம வளர்ச்சிக்கும், அபிவிருத்தி தலையீட்டை நிலைத்து நிற்க கூடியதாக மாற்ற உதவும் என்ற யோசனையை முன்வைக்கின்றது.

1940களின்பிற்பட்டகாலங்களில்மாறிமாறிஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகள் தங்களுடைய கட்சிக்கொள்கைகள் கிராமிய மக்களைச் சென்றடைவதற்கும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதாகவும் (தந்திரோபாயமாக] கிராம முன்னேற்ற சங்கங்கள் மாதர் முன்னேற்றச்சங்கங்கள்(காலப்போக்கில்கிராம அபிவிருத்திச் சங்கமாக மாற்றம் பெற்றது). சனசமூக நிலையங்கள் என்று மக்கள் அமைப்புக்களை உருவாக்கி நலிந்த இப்பிரிவினரின் பங்கெடுப்புடன் தங்களுடைய ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றினரே தவிரஅடிப்படைத் தேவைகளைத் தானும் கிடைக்கச் செய்யவில்லை. அதேவேளை இம்மக்கள் அமைப்புகளும் கிராமிய அபிவிருத்திக்கோட்பாட்டிலிருந்து தூண்டல் பேற்றை தனியலகுகளாக நோக்கம் இலக்கு என்பவற்றிலிருந்து வழுகிச் சென்றதனை கடந்தகால அனுபவங்களும், பாடங்களும் தெரிவிக்கின்றன. இம்மாதிரியான அமைப்புகள் முக்கியமான அடிப்படைப் பிரச்னைகளைப் புறக்கணித்து காலப்போக்கில் ஒப்பந்தங்களாக மாற்றி அரசினால் வழங்கப்பட்ட, ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இதன் அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகளில் ஏற்பட்ட மாறுதல்கள் மக்கள் இதிலிருந்து விலகிச் செல்வதற்கு ஏதுவாயிற்று.

இம்மக்கள் அமைப்புகளே ஒழுங்கமைப்புச் செய்து வழி நடத்திச் செல்லவேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால் இலங்கை ரீதியாக பார்ப்போமானால் 80 வீத மக்கள் 1500 கிராமங்களிலே வாழ்கின்றனர். ஏறக்குறைய தமிழீத்தில் 3000 கிராமங்களில் எமது தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்றபோது இவர்களுடைய சமூக அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்வதற்கும் மக்கள் அனைவரையும் அபிவிருத்தியில் பங்குகொள்ளலை ஊக்கப்படுத்துவதற்கும் இவ்வமைப்புக்களை புனரமைப்புச் செய்யவேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது.

இம்மாற்றமானது கிராமிய அமைப்புகளை புத்தம் புதியதொரு அணுகுமுறைக்கு இட்டுச் செல்வதற்காக ஆயத்தங்களைச் செய்வதற்கு தமிழீழ நிர்வாக சேவை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் எதிர்பார்ப்புகள் ஏற்கனவே இருந்த அவைகளை விட முற்றிலும் மாறுபட்டவையாகவே இருக்கும், எனவே அதன் நோக்கங்களையும் இலக்குகளையும் இங்குகுறிப்பிடவேண்டியதுஅவசியம். தற்போதைய அரசியல் பொருளாதார சூழ்நிலைக்கு புதிய மாற்றுவழி ஒன்றுக்கான தேவையும் அதுவே.

அனைவரது தேவைகளையும் நிறைவு செய்ய போதிய அனைத்துமே விளங்கியுள்ளது. ஆனால் ஒவ்வொருவரது பேராசைக்கு தேவையானது இல்லை'' என்ற கோட்பாடுகள் மக்கள் தற்சார்பு நிலையை வலியுறுத்தி இம்மக்கள் அமைப்புகளை கிராமிய மேம்பாட்டிற்கான நோக்கில் ஈத்தெடுக்கவேண்டியதாகின்றது, எந்த ஒரு மனிதனும் ஆக்க சக்தி உடையவராக இப்பூமியில் பிறக்கிறான். ஆனால் அவனைச் சூழவுள்ள காரணிகளே அவனுடைய முன்னேற்றத்தில் சாதகமாகவும், பாதகமாகவும் அமைகின்றன. இதுபோன்றதே ஒரு சமூகத்தின் நிலையும். எனவே இந்த சமூக அமைப்புக்களை கிராமிய மேம்பாட்டுக்கான நேரத்தில் ஈத்தெடுக்க வேண்டியதாய் உள்ளது. இப்புதிய அணுகுமுறையானது தயாரித்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு விவேக பூர்வமான அமைப்புகளூடாக பரவலாகக் காணப்படும் சமூகதேவைகளை இது பூர்த்தியாக்கும்போது கிராமிய வரலாற்றினையும், பண்பாட்டினையும் இவ் அமைப்பக்கள் விஞ்ஞான பூர்வமாக அணுகுகிறது:

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் சமூக பொருளாதார பிரச்னைகளில் பிறிதொரு அம்சம் பால் சமத்துவப் பிரச்னையாகும். உண்மையிலேயே வறிய பெண்கள் குறிப்பாக முறைசாராத்துறைக்கூடாக பொருண்மிய வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பினை நல்கிவந்தார்கள் என்பதற்கு பல சாட்சியங்கள் காணப்பட்டன. ஆனால் இவர்களுக்கான மேம்பாட்டு ஒழுங்கமைப்பு முறைகளும் உண்மையான சரியான வழிகாட்டல்களும் இங்கு நடைபெறவில்லை, அதாவது நிறுவனமயப்படுத்தப்படவில்லையென்றே சொல்லாம். ஆகவே சிறந்த ஒழுங்கமைப்பினாலும் உள்ளூர் மூலவளங்களையும் அறிவினையும் மகளிரின் ஆக்கத்திறனையும் பயன்படுத்துவதன் மூலம் இந்நிலையம் வெற்றிகொள்ளமுடியும். எனவேதான் நலிந்த பிரிவினரின் பங்கெடுப்புடன் நிலைத்து நிற்கக்கூடிய மேம்பாட்டினை தூண்டிவிடக்கூடிய சாத்தியப்பாட்டினையும் கடந்தகாலப் போக்குகளை திசை திருப்புவதற்கான ஆற்றதிகளையும் இந்த மக்கள் அமைப்புகள் எதிர்காலத்தில் கொண்டிருக்கவேண்டும்.

கடந்தகால கிராமிய அலகொன்றை பகுத்து ஆய்வுகளை மேற்கொண்டால் செல்வந்தர். நிலச்சுவாந்தர், வட்டிக்கு பணம் கொடுப்போர். வியாபாரி, அதிகாரி முதல் நிலையாகவும் வறியோர்கள் ஆண்பெண் நிலமற்றோர், சாதி இளைஞர் மதம் என்ற பல்லினத்தன்மையாககிராமிய சமூகக்கட்டமைப்புஅதாவது கிராமியத்தில் தனித்த பொருண்மிய அலகுகளாக இல்லை என்பதனையே இது எடுத்துக் காட்டியது. இதில் முதற் சொல்லியவர்களின் செல்வாக்கு கடந்த கால சமூக அமைப்புகளில் வேரூன்றி நின்றது குறிப்பிடத்தக்கது. இப்பல்லினத் தன்மை கொண்ட கிராமிய அமைப்பின் மேல் இருந்து கீழ்நோக்கிய திட்டமிடல் முறையினால் ஏற்படும் பாதிப்புகள் மேம்பாட்டைத் தடுத்து விடுகின்றது. எனவே கிராமிய மக்களை அவர்களது உள்ளங்களில் கூட்டுறவு மதிப்புகளையும் குழு நடவடிக்கைகளையும் ஜனநாயக சமூக பெறுமா

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்கள் பல நன்மைகளைப் பெறும் வாய்ப்புள்ளது

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பேட்டி

தமிழ் மக்கள் குறிப்பாக வடபகுதி இளைஞர்களின் உயர் கல்வித் தேவையை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவெளிவாரிப் பட்டப்படிப்புத்துறை இன்று ஓரளவு பூர்த்தி செய்து வருகின்றது.

க. பொ. த. (உயர்தரத்தில்) கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பல்கலைக்கழகங்களில் இடவசதி விரிவடையாது இருப்பதும், காலியாக உள்ள இடங்களை நிரப்ப முடியாமல் இருக்கும் பல்கலைக்கழக அனுமதி முறையாலும் பெருமளவு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுடைய கல்வியைத் தொடர முடியாமல் உள்ள நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரித்துறை ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு இருப்பினும் அங்கு பதிவு செய்து படிப்பதில் யாழ். மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரித்துறைஅமைக்கப்பட்டமை சிறப்பாக அமைகிறது. குறைந்த செலவுடன் தங்களது சொந்த வீடுகளில் இருந்து கொண்டே கல்வியில் நாட்டம் கொண்டவர்கள் தங்களது கடின முயற்சியினால் பட்டதாரியாகிவிடும் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இன்று மாணவர்களின் உயர்தர கல்வியை முன்னேற்றுவதில் அக்கறையோடும், ஆர்வத்தோடும் செயல்பட்டு வருபவர்தான் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை. அடக்கமாகவும் அமைதியோடும் கலைப்பீடாதிபதியாக கடமையாற்றிவரும் அவரை சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர் தெரிவித்த கருத்துக்கள் கேள்வி பதில்களாகத் தரப்படுகிறது.

கேள்வி: யாழ். பல்கலைக்கழக வெளிவாரித்துறையின் தோற்றம் வளர்ச்சிபற்றிக் கூறுவீர்களா?

பதில்: இத்துறை 91ம் ஆண்டு உருவாக்கப்பட்டு 90/91 பல்கலைக்கழக கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் 1,300 பேர் கலை, வர்த்தகப் பிரிவுகளுக்குப் பதிவு செய்தார்கள். இப்பிரிவினருள் ஒரு பகுதியினர் இவ்வருடம் பரீட்சை எழுதி பட்டதாரி ஆகின்றார்கள் இதுவரை 90/91, 91/92, 92/93, 93/94 ஆகிய நான்கு வருடப் பதிவுகள் முடிந்துவிட்டன. இந்த நான்கு வருடங்களுள் 3500 மாணவர்கள் வரை பதிவு செய்திருக்கின்றார்கள். இவ்வருடம் 3 வருடப் பரீட்சைகள் இடம்பெறுகின்றன. பொதுக்கலை மாணவர்கள் இவ்வருடம் இறுதிப் பரீட்சை எடுத்து வெளியேறவுள்ளனர். வர்த்தகப் பிரிவு மாணவர்களின் கற்கைக் காலம் 4 வருடமானபடியால் அடுத்த வருடமே அவர்கள் இறுதிப் பரீட்சை எழுதுவார்கள். அடுத்த 94/95ம் ஆண்டுக்குரிய பதிவுகள் 1995மார்ச் ஏப்ரல் மாதங்களில் தொடங்கும். இது வெளிவாரிப்பட்டப்படிப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் 5வது அணியாகும்.

கேள்வி: வெளிவாரித்துறைகளுக்கு ஆங்கிலம் கட்டாய பாடம் எனபதினால் மாணவர்கள் படிப்பதற்கு தயக்கம் காட்டி வருவதாக பொதுவாக மாணவர்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகின்றதே?

பதில்: ஆங்கிலம் இரண்டாவது மொழியாக படிப்பது நன்மை தருவதாக அமையும். ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் இருப்பதாலும், இது கட்டாயம் என்பதால் சிறிது கவனம் எடுத்து படித்து சித்தி அடைகிறார்கள். முதலாம் வருடம் சித்தி எய்தத் தவறும் மாணவன் 2ம், 3ம் வருடங்களில் எடுத்து சித்தி அடையலாம். அவர்கள் வெளிவாரி பட்டதாரியாக வெளியேறுவதற்கு முன்பு சித்தி அடைய காலஅவகாசம் உண்டு.

கேள்வி: உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கிடையில் கல்வியில், தரத்தில் ஏதும் வித்தியாசம் இருக்கிறதா?

பதில்: உள்வாரி மாணவர்கள் பல்கலைக்கழக வாழ்க்கை மூலம் பல அனுபவங்களைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கீழ் அவர்கள் நேரடியாக கல்வியைப் பெறுகின்றனர். இதனால் இருவருக்குமிடையில் ஆளுமை நிலையில் வித்தியாசம் ஏற்படுகிறதேயல்லாமல் கல்வி நிலையில் வேறுபாடு இல்லை. அரசாங்கமும் வேறுபாடு காட்டுவதில்லை. தொழில் கொள்வோர் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப இவர்களைத் தெரிவு செய்வார்கள்.

பேட்டி கண்டவர்:

**மணிசேகரன்**

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்கள், ஏனைய வெளிவாரி மாணவர்களிலும் பார்க்கச் சில சாதக நிலை பெற்றிருக்கிறார்கள். யாழ், பல்கலைக்கழகக் கல்விமான்கள் பொதுவாழ்வில் பல்வேறு கல்விசார் நிகழ்ச்சிகளில் பங்குகொள்கின்றார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள் வழியாக இக்கல்விமான்களின் கருத்துக்களையும் எழுத்துக்களையும் அறியக்கூடிய வாய்ப்பை இப்பிரதேச வெளிவாரி மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

கேள்வி: யாழ். பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கை நெறிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: இப்பொழுது வெளிவாரியாகக் கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு வெளிவாரித்துறை பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. பல்வேறு தொழில் நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களும் படிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் கால இழப்பு இல்லாமல் சித்தியடையாத பாடங்களை, அடுத்தடுத்த பரீட்சைகளில் எடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதனால் இப்பரீட்சைகள் காலஇழப்பு, பின்அறிவைப் பயன்படுத்திச் சித்தியடையும் தன்மை கொண்டது.

கேள்வி: வெளிவாரிப் பட்டப் படிப்பு ஆரம்பித்த காலத்தில் பல்கலைக்கழகத்தில் பல வழிகாட்டல் வகுப்புக்கள் இருந்தன, இப்பொழுது இல்லை. எதற்காக?

பதில்; ஆரம்ப காலத்தில் அதற்கான தேவை ஒன்றிருந்தது. அப்போது பல்கலைக்கழகங்களுக்கு வெளியே கற்பதற்கு நிறுவனங்கள் இல்லை. இப்போது பல நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. ஆனபடியால் இன்று பல்கலைக்கழக வழிகாட்டல் தேவையில்லை, மேலும் பல்கலைக்கழகத்திலும் பல வசதியீனங்கள் உண்டு. வெளிவாரி மாணவர்களுக்கு ஏற்றவாறு யாழ். மாநகரசபை நூலகத்தை விருத்தி செய்வதற்கான முயற்சிகளில்ஆணையாளருடன் இணைந்து செயலாற்றி வருகின்றோம். அதில் வெற்றியும் பெற்றுள்ளோம். இன்று யாழ். மாநகரசபை நூலகம் வெளிவாரி மாணவர்களின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது.

கேள்வி: வெளிவாரியாகப் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் பதிவு செய்வதற்கு, என்ன தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்?

பதில்: க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் 3 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்தால் போதுமானது. விஞ்ஞானப் பாடங்கள் எடுத்தவர்களும் முதற் கலைத் தேர்வில் பயிலலாம். இது தவிரப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், தொழில்நுட்பக் கல்லூரித் தகைமைகள், வட இலங்கை சங்கீதசபை ஆசிரியத்தகைமை பெற்றவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் போன்றவர்கள் படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

தொழில் தகைமை பெற்றவர்களும் அங்கீகரிக்கப்படுவர். இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் உள்ளவர்களும், இது தவிரப் பல்வேறு கல்வித் தகைமைகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. க. பொ. த. உயர் தரத்திற்குச் சமமான தகைமை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். அங்கீகரிக்கப்படாத நிறுவனம் ஒன்றின் கல்வித் தகைமை உடையவர்களின் விண்ணப்பங்கள், தனித்தனியாகப் பல்கலைக்கழகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதிக்கப்படும் வாய்ப்புக்கள் உண்டு.

கேள்வி: வெளிவாரித்துறையில பதிவு செய்த மாணவர்கள், பின்பு ஒரு கட்டத்தில் உள்வாரி மாணவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுண்டா ?

பதில்: வெளிவாரித்துறையில் முதற் கலைத் தேர்வில் சித்தியடையும் ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவராக எடுபட்டால் 2ம் வருடத்துக்கு உள்வாரி மாணவர்களாகப் படிப்பை மேற்கொள்ள வசதி இருக்கிறது.

பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் வெளிவாரியாக மிகத் திறமையாகச் செய்த மாணவர்கள் சிறு தொகையினர் உள்வாரி மாணவர்களாக அனுமதிக்கப்படுகிறார்கள், இத்தகைய ஒரு முடிவைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கின்றபோதும் இதனை நடைமுறைப்படுத்தச் சில காலம் எடுக்கும்.

ஒரே நேரத்தில் இரண்டு பல்கலைக்கழகங்களில் பதிவையோ அல்லது ஒரு பல்கலைக்கழகத்தில் இரண்டு கற்கை நெறிகளுக்குப் பதிவு செய்ய முடியாது. (ம-சி)

---

பொது அமைப்புக்களின்
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னங்களையும் உள்ளக முயல்தலையும் தூண்டி விடுவதற்கு அற்பணிப்பு மிச்க நபர் அல்லது மக்கள் அமைப்புகளை ஆரம்பிக்கவேண்டியது அவசிமாகின்றது.

மேலும் இவ்வமைப்புகள் ஜனநாயக பெறுமானங்கள் கூட்டுறவு விருப்பு, கூட்டு விருப்பு பொருண்மிய சமூக நிர்வாகம் பகிர்வு சமத்துவம், உள்ளூர் மட்டத்தூண்டுதல், சுயசார்பு ஆகியவற்றினை அடியொற்றியபொருண்மியஅடித்தளத்தினையும் சுயநிர்வாக ஊக்கத்தையும் நோக்குகளையும் கொண்டிருக்கும் அதே வேளை இந்த நிறுவன அமைப்புகள் தற்போதைய அரசியல் அதிகாரத்திற்குட்பட்டதாகவே அமைவுறும் தன்மையை பெற்றிருக்கும். இந்த நிகழ்வுப் போக்கு உருவாகவும் நிலைத்து நிற்பதற்கும் தொடர்ச்சியான சுய மதிப்பீடும் உள்ளகத் திருத்தங்களும் அவசியம். இது நிர்வாக சேவையின் அனுசரணையுடன்செயல்படும். இவ்வமைப்புகளை வழிநடாத்தும் பங்குகொள்ளும் அனைவரும் தங்களுக்கான அபிவிருத்தி முதன்மையைக்காண வேண்டும். அது எவ்வாறு என்பது பற்றி சுருக்கமாக இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதாக அமையும். (தொடரும்)

---

# சிறிலங்கா பொலிஸ் சேவை மறு சீரமைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

உயர் அதிகாரிகளாக தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் போதிய கல்வி அறிவு அற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

இவ்வாறு, பொலிஸ் மத்திய நிலைத்தின் சேமநலச் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சிசகர் குணசேன வீரகொட பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுன் நடத்திய கலந்துரையாடலின் போது கூறினார்.

அவர் தற்போது பொலிஸ் திணைக்களத்தில் நிலவிவரும் குறைபாடு பற்றி மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் ஒரே நிலையத்தில் பல வருடங்களாக கடமையாற்றுவதினால் பல ஊழல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுடக்கூடியதாக இருக்கிறது. ஆகவே எந்த ஒரு அதிகாரியும் மூன்று வருடங்களுக்குமேல் ஒரு ஒரு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்ற அனுமதிக்கக் கூடாது.

பொலிஸ் திணைக்களத்தில் தற்போது முப்பதாயிரம் நிரந்தரப் பொலிசாரும், முப்பதாயிரம் ரிசேவ் பொலிசாரும் கடமையாற்றுகிறார்கள், இவர்களின் நலன்கள் வருங்காலத்தில் சீரமைக்கப்படுவதுடன் பொலிசாரின் பதவி உயர்வுகளும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டுமென்றும் கூறினர்.

பொலிஸ்சேவையின் நற்பெயர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய பொலிஸ்சேவை மறு சீரமைக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

[வி-கே-ம-ரி)

---

அரச சேவையிலிருந்து

# 60வயதிற்குமேற்பட்டோரை நீக்க சுற்றறிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் 60வயதுக்கு மேற்பட்டவர்களை வைத்திருப்பதில்லை யென்ற சுற்றறிக்கை சகல அரசாங்க திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் சபைகள் போனறவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தால் பல அனுபவப்பட்ட திறமைமிக்க அதிகாரிகள் சேவையில் இருந்து நிறுத்தப்பட இருக்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுகாதாரத் திணைக்களம் உட்பட வேறு அத்தியாவசியச் சேவையில் 60 வயதிற்கும் மேற்பட்டோரைத் தொடர்ந்தும் சேவையில் வைத்திருக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. (ம-சி)

---

## கொள்ளை

(கொழும்பு)

கம்பளை நகரில் வழிப்பறித் திருடர்களால் 2 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். (ம)

மணிவாக்கு

மனத்தையும் உள்ளத்தையும் பரிசுத்த மாக்கும் ஞானம்தான் உண்மையான ஞானம். மற்றவையெல்லாம் அஞ்ஞானமாம்.

- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்

# குறைந்த குத்தகையினல் 45 கோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)

பாரிய அளவிலான இரண்டு காணிகளின் கொடுக்கல் வாங்கலில் ஊழல்கள் நடந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனல் நாட்டிற்கு 45 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி வீதி, கொள்ளுப்பிட்டியிலும், கோட்டையிலும் உள்ள இரண்டு காணிகள், இரண்டு தனியார் கம்பனிகளுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இக்காணிகளின் பெறுமதி மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், நகர அபிவிருத்தி அதிகார சபை வழமையான நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள காணியைக் கேள்விப்பத்திரம் கோராமல், முன்னைய அரசாங்கம் குறைந்த வாடகைக்கு அதாவது மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வாடகைக்கு ஒரு தனியார் கம்பனிக்குக் கொடுத்துள்ளது.

இந்த முறைகேடான காணிக் கொடுக்கல் வாங்கலை, அமைச்சர்மில்சிறிபால டி சில்வா விசாரணை மூலம் கண்டறிந்ததும் இந்தக் காணிகளை நகர அபிவிருத்தி அதிகாரத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (கே-சி)

## இன்று

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் வருடம்தோறும் நடாத்தப்படும் சைவநெறித்தேர்வு இன்று 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி முதல் பாடசாலைகளில் நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் குறித்த நேரத்திற்குமுன் தத்தமது பரீட்சை நிலையங்களுக்குச் செல்லுமாறு சபையின் தேர்வுச் செயலாளர் திரு. வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (154)

0 0 0

(அரியாலை)

சுழிபுரம் பறுளாய் ஈசுரவிநாயகர்தேவஸ்தானத்தில் இன்று 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தித் திருவிழாவன்று இரவு 7 மணிக்கு இறையருள் வேண்டி 108 விடிவிளக்குகள் ஏற்றப்படவுள்ளன. [59]

0 0

[யாழ்ப்பாணம்]

தமிழ்சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழ்எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது. பயிலரங்கில் இலக்கினபாவங்கள் பற்றிய விரிவுரையும், புக்குடுதீவு நயினுதீவுபலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் ப. கனகலிங்கம் 'தெசாபத்திகள்' என்ற தலைப்பிலும் ஐ. வைத்தியநாதர்ஜாதகணிதம் என்ற பொருளிலும் ஆய்வுரை வழங்குவர், [எஸ்]

## நமது நோக்கு

### 'குலேப்பனில்' கூறுவது...!

அந்த நோயாளிக்குக் 'குலேப்பன்' கூடிவிட்டது; எனவே வாய் பிதற்றுகிறர். கூட இருப்பவர்களுக்கோ காரணமற்ற கவலை!

மனோதத்துவ நிபுணர் வருகிறர். "இது மனக்கோளாறு. பிதற்றும் சொற்களோ சில குறியீடுகள். அவற்றை ஆய்வு செய்தால் பல அற்புதச் செய்திகள் கிடைக்கும். எனது கண்காணிப்புக்கு அனுப்புங்கள்!" என்கிறர். தனது ஆய்வுக்கு ஒரு 'பிரகிருதி' (CASE) கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியில்!

குட்டிச்சாத்தான்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருப்பதாக எண்ணி, ஏமாந்து கொண்டிருக்கும் ஒரு வேப்பிலைக்காரரோ, "இது ஒரு தேவதைக் குறைபாடு. ஒரு மடையோடு சரிவந்துவிடும்!" என்கிறர் படையல்பற்றிய கனவோடு!

இன்று - தேர்தல் சுரம்; அதன் வேகம் அதிகரித்து, வாக்கு வேட்டைக்காகப் பலவிதமாக, பதட்டத்தோடு வரும் கருத்துக்களிற் கவனம் செலுத்த வேண்டுமா?

ஆனல், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், இந்த நல்ல தருணததை நழுவவிடக்கூடாது என எண்ணிக் கொண்டு, வேட்பாளர்கள் கருத்துக்களுக்குப் பலவித அர்த்தங்கள் கொடுப்பதும், அழுத்தங்கள் போடுவதும் தெரிகிறது.

குறிப்பாக - சிறிமா திசநாயகா பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் "ஆயுதங்களை வைக்கும் மட்டும் அவர்களோடு பேச முடியாது!" என ஏதோ புதிய ஜனநாயக அரசியற் சித்தாந்தத்தை அறிந்துவிட்டமாதிரிக் கூறியுள்ளது வியப்பிற்குரியதன்று.

ஏனெனில் - கடந்த பத்தாண்டு காலமாகப்பாடிய பழைய பல்லவி இது. ஜே. ஆர். முதல் பலர் பாடி அலுத்துவிட்டார்கள், பலன் ஏதும் கிடையாமல்.

ஆயுதத்தை வைத்துவிட்டால் அது சரணகதிக்குச் சமன் என்பதை யார்தான் அறியவில்லை?

ஆயுதப் போராட்டம் என்பது இங்கு மாத்திரம் நடைபெறும் புதுமையல்ல. உலகின் பல்வேறு பகுதிகளில ஒடுக்கப்பட்ட மக்கள், தமது உரிமை பெற்றிட நடத்தும் போராட்டம்.

அங்கெங்லாம் - ஆயுதங்கள் வைத்த பின்தான் பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாடு இருக்கவில்லை.

உலக வரலாற்றையெல்லாம் உணராது, தேர்தலிற் குறிவைத்துக் கூறிவருவதைப் பொருட்படுத்தாது எமது விடுதலைப் பணியைத் தொடரவேண்டும்!

இலங்கை கடற்படை தாக்குதல்:

# இந்திய மீனவர் விடயத்தை மத்திய அரசு கவனிக்கவேண்டும்

## ஜெயலலிதா நெருக்குதல்

(சென்னை)

கடலில் மீன்பிடிக்கச்செல்லும் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தாமல் தடுப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மையில் கச்சதீவுஅருகே இந்தியப்படகு ஒன்றை இலங்கை கடற்படையினர் தாக்கியதை முதலமைச்சர் கண்டனம் செய்தார்.

அந்தப்படகில் மீன்பிடிக்கச் சென்ற ஐந்து இந்திய மீனவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதும் ஏனைய நால்வரும் காயமடைந்ததும் தெரிந்ததே.

தமிழ்நாட்டு மீனவர்கள் தமது தொழிலை அமைதியாக நடத்த முடியாமல் இலங்கை கடற்படையினர் அவர்களைத் தடுத்துவருவதாகவும் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (இ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-06
ஞாயிறு இரவு

| | |
|---|---|
| 8-01 | இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் செல்வி ஜெயந்தி அவர்கள் |
| 08-20 | தாயகப் பாடல்கள் |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | தொடர் நாடகம் பொன் கணேசமூர்த்தி எழுதும் "இலங்கைமண்" 46ம் அங்கம் |
| 09-00 | மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும். |

1994-11-07
திங்கள் காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீரவணக்கம் |
| 07-15 | நீங்கள் கேட்டவை |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 07-40 | நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி |
| 08-00 | மணிக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும். |

# இலவச மூக்குக் கண்ணுடி சர்வோதயம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட நிலையம் இலவசமாக மூக்குக் கண்ணுடிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மூக்குக் கண்ணுடிகளை இலவசமாகப் பெற விரும்புபவர்கள், கண் வைத்தியரிடம் இருந்து பெறப்பட்ட சிபார்சுக் கடிதத்தின் பிரதியுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் யாழ். இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்திருக்கும் யாழ். மாவட்டச் சர்வோதயநிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வசதி குறைந்த மக்களுக்கு மூக்குக் கண்ணுடி விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (162-ெ)

## தேங்காய் விலை அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. 15-00 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று தற்போது 22-00ரூபாதொடக்கம் 25-00 ரூபா வரை அதிகரித்துள்ளது. (72)

# பஸ் கொள்வனவிலும் முன்னைய அரசு மோசடி

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி கடந்த காலத்தில் பஸ் கொள்வனவில் பெரிய திருகுதாளம் புரிந்துள்ளது என்று 'தினகரன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பல ஊழல்கள் புரிந்துள்ளது என்று அவற்றை விசாரணை செய்ய தற்போதைய அரசு பல ஆணைக்குழுக்களை நியமித்திருக்கின்றது.

முன்னைய ஆட்சியாளர்களால் திறைசேரி முற்ருக காலி செய்யப்பட்டதும் நாடுபெரும் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டதும் தெரிந்ததே. [ம-சி[

## பலதும் பத்தும்

### அவருக்கு 67

"திருக்குறள், வேதாந்தம் தேவாரம் முனிமொழி, திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் என்ற ஏழுநூற்களும் ஒரே தன்மையுள்ளன என ஒரு புலவர் பாடியுள்ளார். இந்த ஏழில் முதன்மை பெறுவது திருக்குறள் — இப்படி எழுதியவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

ஏழில் ஒன்று என்ற அவரது கட்டுரையோடு வள்ளுவர் காட்டிய வழியில் என்ற தலைப்பில் கலாநிதி க. கனகராசா பற்றியும் எழுதிய கட்டுரையோடும் ஒரு அழகிய சிறிய வெளியீடு ஒன்றை அண்ணு தொழிலகம் வெளியிட்டுள்ளது.

க. கனகராசாவின்67ஆம் நிறைவு நாளை ஒட்டியே அது வெளியிடப்பட்டுள்ளது. இன்றும் இளமைத் துடிப்போடு அவர் செய்யும் பொதுப்பணி போற்றற்குரியது.

—மயூரன்

## இராசி பலன்

06 - 11 - 1994
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி-20)

திருதியை பகல் 10-22வரை கேட்டை இரவு 8-24 வரை, மரணயோகம், இராகுகாலம் மாலை 4-25 முதல் 6-04வரை சுபநேரம் காலை 9-05 முதல் 10-35 வரை.

மேடம்: காரிய விக்கினம், புத்திரர் கவலை, தோல்வி.

இடபம்: தன லாபம், குடும்ப சுகம், மன மகிழ்ச்சி.

மிதுனம்: விரோதிகளை ஜெயித்தல், பணவரவு, சுப நிகழ்வு.

கடகம்: பெண் பகை. அநாவசிய யோசனை, மறதி.

சிங்கம்: முயற்சி தாமதம், நண்பர் துயர், அலைச்சல்.

கன்னி: வித்தை விருத்தி, வெளியார் உதவி, பயணம்.

துலாம்: வீண் பகை, விதண்டாவாதம், மனச்சுமை.

விருச்சிகம்: நினைத்தது கைகூடல், பெரியோர் ஆசி, தியாகம்.

தனுசு: உற்றூர் பகை, நலக் குறைவு, கண்டனம்.

மகரம்: வாதத் திறமை, தொழில் சிறப்பு, தானதர்மம்

கும்பம்: பதவி மாற்றம், கலந்துரையாடல், கலகலப்பு.

மீனம்: அற்பர் நேசம், பழி வாங்கல், வயிற்றில் ரோகம்

— ஜோஸ்யர்

யாழ். மாநகராட்சி மன்ற

# தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தில் பணிபுரியும் நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு யாழ். மாநகராட்சி மன்றம் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இங்கு கடமையாற்றும் தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கான அனுமதியை வடக்கு கிழக்கு மாகாணசபை, மாநகராட்சி மன்றத்துக்கு வழங்கியிருப்பதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். 154

## கற்பகச் சோலை காலத்தின் தேவை

ஜனாதிபதித் தேர்தல்:

# வன்னி மாவட்டத்தில் 1,78,697 பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் வன்னி மாவட்டத்தில்ஒருலட்சத்தி 78 ஆயிரத்து 697 பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாகவுள்ளனர் என்று தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அடங்கிய. வன்னி மாவட்டத்தில் மொத்தம் 169 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

72434 வாக்காளர்களைக் கொண்டவவுனியாவில்65வாக்களிப்பு நிலையங்களும் 54069 வாக்காளர்களைக் கொண்ட மன்னாரில் 54 வாக்களிப்பு நிலையங்களும் 52197 வாக்காளர்களைக்கொண்ட முல்லைத்தீவில் 50 வாக்களிப்புநிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது. -வி

இனப்பிரச்னைக்கும்

# யுத்தத்திற்கு தீர்வு காண ஐ.தே.க. யோசனை கூறட்டும்

– பிரதமர் சந்திரிகா சவால் –

[கொழும்பு]

'இனப்பிரச்னைக்கும், யுத்தத்திற்கும் தீர்வு காண்பதற்கான தமது யோசனைகளை மக்கள் முன் வைக்குமாறு ஐ. தே. க. வினருக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் நான் சவால் விடுக்கிறேன்.' இவ்வாறு பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க தெரிவித்தார்.

நேற்று அவர் நிகழ்த்திய ஜனாதிபதி தேர்தல் பிரசார உரையின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

எம்முடைய யோசனைகங் தெளிவானவை. நாம் இரகசிய நிகழ்ச்சித் திட்டங்களை வைத்திருக்கவில்லை. அதுபோலவே இரகசியப் பேச்சுவார்த்தை எதனையும் நடத்தவில்லை. நாம் மக்களிடமிருந்து பூரண ஆணையைப்பெற்றோம்.

திரு. காமினி திஸாநாயக்கா மற்றும் பலரின் படுகொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகள் விரைவாகவும் சுயாதீனமாகவும் நடைபெற்று வருகின்றன. இந்தப்படுகொலைக்கு பொறுப்பாளிகள் யார் என்பதை விரைவில் தெரிந்துகொள்வோம்.

அவர்கள் யாராக இருந்தாலும் சரி எமது அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்பதை நான் திட்டவட்டமாக தெளிவாக்க விரும்புகின்றேன்.

ஐ. தே. க. வினால் ஆரம்பிக்கப்பட்ட ஆயுத கலாச்சாரத்தின் வரலாற்றில் இது மற்றுமொரு கொடிய சம்பவமாகும். ஐ. தே. க. அரசாங்கத்தை கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடையச் செய்ததன் மூலம் இந்த ஆயுத கலாசாரத்திற்கு முடிவுகட்ட வேண்டுமென்ற தமது விருப்பத்தை இந்த நாட்டுமக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இனப்போரை பொறுத்தவரையில் இந்த முடிவில்லாத யுத்தம் தொடர்வது தான் தீர்வா? அல்லது சமாதானத்தை அடைய நாம் முயற்சி செயய வேண்டுமா? நண்பர்களே முடிவு உங்கள் கைகளில் தான் இருக்கிறது. ரி-சி

★ தேர்தல் பணி:

# 500 பொலிஸார் தீவுப்பகுதிக்கு வந்தனர்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்காக 500 பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மாஅதிபர் ஐ கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் தேர்தலை நடாத்துவதற்காக இன்று அதிகாரிகள் குழுவொன்று கொழும்பிலிருந்து பலாலி வந்து அங்கிருந்து தீவுப்பகுதி உட்பட படையினரின் பிடியிலுள்ள இடங்களுக்கு செல்லவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தேர்தல் கடமையில் 225 அரச அதிகாரிகள் ஈடுபடுவார்கள் எனவும்தெரிவிக்கப்படுகிறது. -சி

கொட்டாஞ்சேனையில்

# ஆறு தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள சந்தேகத்திற்குரிய வீடுகளை சுற்றிவளைத்த பொலிஸார் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஆறு தமிழரை கைதுசெய்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன் கொழும்புக்குவந்துள்ள இவர்களுக்கு கொழும்புடன் உள்ள தொடர்பு எவ்வாறானது என பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

காமினிதிஸநாயக்காகொலை செய்யப்பட்டபின் கொழும்பில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. ரி-சி

முன்னாள் அமைச்சர்களின்

# ஆடம்பர வாகனங்கள் நேற்று விற்பனை

[கொழும்பு].

முன்னைய அரசாங்க அமைச்சர்கள் பயன்படுத்திவந்த பல ஆடம்பர மோட்டார் வாகனங்கள் நேற்று ஏல விற்பனைக்கு விடப்பட்டன.

நேற்று பத்து வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆடம்பர வாகனங்களின் விற்பனைமூலம் அரசு ஒரு கோடி 29 லட்சம் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இந்தப்பணம் அரசாங்கத்தின் திரட்டிய நிதியில் சேர்க்கப்பட்டு சமூக நலன் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

எஞ்சிய வாகனங்களும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் விற்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# ஜனாதிபதிதேர்தலின்பின்னர் தெற்கில் வன்முறை ஏற்படலாம்?

(கொழும்பு[

ஜனாதிபதி தேர்தலின் பின் தெற்கில் தேர்தல் வன்முறைகள் ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது,

இத்தேர்தல்வன்முறையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தென்பகுதியில் பாதுகாப்புநடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தேர்தலில் பொ .ஐ. மு' ஆதரவாளர்களுக்கும் ஐ தே. க. ஆதரவாளருக்கும் இடையில் வன்முறைகள் வெடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் ஆரம்பமான நாளிலிருந்து ஆங்காங்கே சிறுசிறு வன்முறைகள் ஏற்பட்டன. காமினியின் கொலையை அடுத்து தெற்கில் பெரும் வன்முறை ஒன்று ஏற்படவிருந்தது. பாதுகாட்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து இவ்வன்முறை கட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது தேர்தலின்பின் வன்முறைகள் வெடிக்கலாம் என்பதனை எதிர்நோக்கி கொழும்பு மற்றும் முக்கியமான இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ரி -சி

3 நாடுகள் கிரிக்கெட்;

# இந்தியா சாம்பியன்

(கல்கத்தா)

இந்தியாவில் நடைபெற்ற மூன்றுநாடுகளுக்கிடையிலான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா, மே. இந்திய அணியை 72 ஓட்டங்களால் வென்று சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது,

இறுதியாட்டத்தில் முதலில் ஆடிய இந்திய அணி [illegible]0 ஓவர்களில் 4விக்கெட் [illegible]இழப்பிற்கு 274 ஓட்டங்களைப் [illegible]ற்றது. இதில் ஆட்ட வீ[illegible]ர்களான ரெண்டுல்கர்-66, ஜடேஜா-58 சிது - 28, அஸாருதீன் - 41 விஞேத்கம்ளி ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களை பெற்றனர்,

அடுத்து ஆடிய மே. இந்திய அணி 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மே. இந்திய அணியில் எந்தவொரு ஆட்டக்காரரும் 40க்கு மேல் ஓட்டங்களை பெறவில்லை. ஆட்டத்தின் நாயகனுக ரெண்டுல்கர் தெரிவானுர். (சி)

ஜனாதிபதி தேர்தல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வாக்குகளைப் பெறுவார் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்,

இதேவேளை ஐ. தே. க, ஜனாதிபதி வேட்பாளரான திருமதி ஸ்ரீமா திஸாநாயக்காவிற்கு அனுதாப வாக்குகள் கிடைத்தாலும் அவர் வெற்றிபெறக்கூடிய நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இலங்கை அரசியலில் தற்போது மக்களின் செல்வாக்குமிக்க தலைவராகிவிட்டதினுல் ஜனாதிபதி தேர்தலில் அவரது வெற்றி உறுதியாகிவிட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் நிபுணர்களின் கணிப்பீட்டின்படி கிராமப்புற மக்களிலிருந்து நகர்ப்புற மக்கள் வரையும் சந்திரிகாவின் செல்வாக்கு அதிகரித்து காணப்படுகிறது. அத்துடன் பாமர மக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள் என பலதரப்பினரிடையேயும் அவரது செல்வாக்கு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ரி-சி

சிதைக்கப்பட்ட

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

மான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஜனதா விமுக்திப் பெரமுன இந்தக் குழுக்களுள் அடங்கியுள்ளன.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு உதவுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது தற்போதைய அரசியல்போக்கில் ஏற்பட்டுள்ள மற்றுமொரு முன்னேற்ற முறையாகும்.

சில சக்திகள் இன உணர்வுகளை தூண்டி விடுவதன் மூலம் குறுகிய அரசியல் லாபம் பெறஎத்தனிக்கின்றன

1977-ம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டில் இனத்துவேசத்தை வளர்ப்பதற்கு சில சக்திகள் பொறுப்பாக இருக்கின்றன.

முன்னைய அரசாங்கத்தினுல் சிதைக்கப்பட்ட இலங்கையை ஐக்கியப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோளாகும். சந்தர்ப்பவாதிகளின் இந்த உபாயங்களினுல் இந்நாட்டு மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள் என்று தாம் நம்புவதாக பிரதமர் கூறினுர். (ம-சி)

புனர்வாழ்வு

(1ம் பக்கத் தொடர்ச்சி(

களுக்காகவே இந்த 538 கோடி ரூபா பணம் ஒதுக்கப்படவுள்ளது,

நாடாளுமன்ற குறைநிரப்பு பிரேரணையின்போது இது அறிவிக்கப்பட்டது, இதில் ஊர்காவல் படையினரின் அதிகரித்த சம்பளத்திற்காக 5 கோடி ரூபாவும் தரைப்படையினரின் சம்பளம், மரணமடைந்த இராணுவத்தினரின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்குதல் அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகள், விநியோகங்கள் ஆகியவற்றுக்கென 230 கோடியே 21 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவும் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான புனர்நிர்மாணம், கட்டிட திருத்தம், வாகன திருத்தம், ஆயுத உபகரணங்கள், ஜீப், கவச வாகனங்கள், தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக 43 கோடியே 76 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவும், விமானங்களின் உதிரிப்பாகங்களை விலைக்கு வாங்கவும், விமானங்களை வாங்குவதற்கான தவணைப் பணத்தை கொடுப்பதற்கும் மற்றும் விமானப் படையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் 59 கோடி ரூபாவும் பொலிஸ் படையில் எல்லைப் பகுதிகளில் போர் அணிகளை வலுப்படுத்த 2 கோடி 34 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் பொலிஸ் சட்ட அமுலாக்கலுக்கு 100 கோடி ரூபா[illegible] ஒதுக்கப்படவுள்ளது தெரிவிக்ஜப்படுகின்றது

புனர்வாழ்விற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரண[illegible] உணவு, ஏனைய அத்தியாவசிய விடயங்களுக்கு 160 கோடி ரூபாவும் கடுமையாக பாதிக் ப்பட்டவருக்கு நட்டஈடு ஞொடுக்க 5 கோடி ரூபாவும் மட்டுமே ஒதுக்கப்படவுள்ளது. ரி-சி

போரா?

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்கு அனுப்பப்படாது தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றுக்கானதடையை நீக்கினேம்: ஆனுல் இந்தப் பொருட்கள் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகள் இவற்றைப் பெற்றிருந்தார்கள். சாதாரண மக்கள்தான் கஷ்டத்தை எதிர்நோக்கினுர்கள்.

இதற்குப் பதிலாக புலிகள் பத்து படையினரை விடுதலை செய்தனர். இதன்பின்பு சமாதானப் பேச்சுவார்த்தையின் முதல்சுற்று இடம்பெற்றது,

இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளுக்கு சாதகமானமுறையில் நாம் நடந்துகொள்ளவில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறவேண்டும் என்று விடுதலைப் புலிகளிடமும் தமிழ் மக்களிடமும் கேட்டோம். அதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள்.

கடந்த பதினேழு ஆண்டு காலத்தின் துக்ககரமான வாழ்க்கையை நிறுத்தி இனப் பிரச்னையை தீர்ப்பதற்கு முயற்சித்தவேளை அவர்கள் ஆதரவு தெரிவித்தார்கள்.

இந்த ஜனுதிபதி தேர்தலில் தோல்வியை தழுவப்போகும் ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மை விடுதலைப் புலிகளோடு சம்பந்தப்படுத்தித் தவருன கருத்துக்களை கூறுகிறுர்கள். இதில் முன்னணிப் பிரசாரகர்கள் முன்னுள் சபாநாயகரும் அவரது ஆதரவாளர்களுமேயாவர். எங்கள் பிள்ளைகளின் சடலங்கள் மேல் இந்த யுத்த வியாபாரத்தை நடத்தியவர்கள் ஐ. தே. க. வினரா? நாங்களா? இந்தப் பிரச்னையை தீர்க்காது இழுத்தடித்தது ஐ. தே. க. வினரா நாங்களா என வினு எழுப்பினுர். [ம-சி[

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அதன் கிளைகள் ஊடாக மண்ணெண்ணை விநியோகத்தை மேற்கொண்டு வருகிறது.

ஒரு லீற்றர் 20-00 ரூபா வீதம், குடும்ப அட்டை ஒன்றுக்கு நான்கு லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்பட்டுவருகிறது. (162)

தற்கொலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டாராம். இவ்வைத்தியர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுளது.

இவ்வைத்தியர் கடமையாற்றிய ஆஸ்பத்திரிக்கு பல தடவை வந்துள்ள மேற்படி தற்கொலையாளிப் பெண் ஒவ்வொரு முறையும் இந்த டாக்டரை சந்தித்துள்ளார் எனவும் இரகசியப் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -ரி-சி

பொலநறுவை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யச் செய்ததுடன், அவருக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கினர். மேலும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அந்நபர்களை எச்சரித்தபோது அந்த நபர்கள் அமைச்சரின் வாகனத்தை நோக்கி கைக்குண்டொன்றை வீசினர்.

எனினும் அக்குண்டு வாகனத்துக்கு சற்று அப்பால் வீழ்ந்து வெடித்ததால் பிரதி அமைச்சரும், வாகனத்தில் சென்றவர்களும் மயிரிழையில் தப்பினர். உடனடியாக பாதுகாப்புக்கு சென்ற படையினர் துப்பாக்கி நபர்களில் மூவரை சுற்றிவளைத்துப்பிடித்தனர்.

இந்தக் கொலை முயற்சி குறித்து துரித விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 06-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber ;B/16336/B;